சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :17.02.2025
வா.சா.1 – கண்ணதாசன் w/oசொக்கலிங்கம்
O.S No. 7/2023:
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

என் தந்தை சொக்கலிங்கம் அவர் உயிருடன் இருந்த காலத்தில் கருப்பணன் சொத்தை அனுபவித்து வரும் போது, அவர் தடை செய்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. 1995ம் ஆண்டு நான் கருப்பணன் அனுபவம் செய்து வந்த காலகட்டத்தை ஏதாவது ஆட்சேபணை செய்தேனா என்றால் என் தந்தை இருந்தவரை அவர் தான் கவனித்து வந்தார். நான் ஆட்சேபணை செய்யவில்லை. வழக்கு சொத்து அனுபவம் எங்களிடம் தான் இருந்தது. என் தந்தையிடம் தான் வழக்கு சொத்து அனுபவம் முதலில் இருந்தது. வழக்கு சொத்து என் தந்தையின் அனுபவத்தில் இருந்தது என்பதை நிருபிக்க வருவாய் துறை ஆவணங்களான அடங்கலோ, அனுபவத்தை காட்ட கிஸ்து ரசீதுகளோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தந்தை இறந்த பிறகு நான் சென்று என் பெயருக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுக்கவேண்டுமென்று தவமணி அவர்களிடம் கேட்டேன். என் தந்தை 2022ல் காலமானார். அசல் உயில் ஆவணமான வா.சா.ஆ.1 யாரிடம் இருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை. என் பெயரில் பட்டா வழங்கும்படி 1995 முதல் 2000ம் ஆண்டு வரை பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்தேனா என்றால் எனக்கு தெரியாது, அதனால் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.3 பட்டாவிற்கும் சம்பந்தமில்லை என்றும், வழக்கு சொத்து சர்வே எண் பட்டாஎண் வா.சா.ஆ.3ல் குறிப்பிட்டுள்ளதற்கும், அதை ஏற்கனவே வட்டாட்சியர் ரத்து செய்துவிட்டபடியால் வா.சா.ஆ.3 ஆவணமானது செல்லத்தகுந்த ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. என் தாயாருக்கு வயது 60 என்றால் சரிதான். பட்டா மாறுதல் செய்தது, செய்வது தொடர்பாக என்

தாயாருக்கு தெரியும் என்றால் கல்வியறிவு இல்லை என்பதால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.14 பட்டாவானது முருகாண்டி, 1974ம் ஆண்டில் அவருக்கு கொடுக்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகம் ஆகும். 1408 பட்டாவில் சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சர்வேஎண்.588/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டா எண்.1408க்கு என் தாத்தா கிஸ்து செலுத்தியதாகவோ, என் தந்தை சொக்கலிங்கம் கிஸ்து செலுத்தியதாகவோ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணமான RTR NO.940/88-89 ஆட்சேபணையில் கையெழுத்து எதுவும் இடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி மீனாள் என்ற மீனாட்சி தேவையற்ற கட்சிக்காரர் என்றால் சரியல்ல. 16.09.1970 தேதியிட்ட கிரைய பத்திரத்தை என் தந்தை சொக்கலிங்கம் உரிய வயதை அடைந்த 1973வது ஆண்டிற்கு பின்னிட்டு 3 ஆண்டுகளுக்குள்ளாக அவர் மேற்படி கிரைய பத்திரத்தை எதிர்த்து வழக்கு எதுவும் தொடுக்கவில்லை என்றும், மேலும் அவர் இறக்கும்வரையிலும், மேற்படி கருப்பணன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை ஆட்சேபிக்கவில்லை என்றும், ஆகையால் என் தந்தை மேற்படி கிரைய பத்திரத்தை ஏற்றுக்கொண்டுவிட்டபடியால் அதை நான் தற்போது எதிர்க்க இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் நகல் எடுத்த போதும் கூட, அவர் இறக்கும் வரையிலும், வழக்கு சொத்தை பொறுத்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காததற்கு காரணம், அவரது தாயார் பரமாயி எழுதிக்கொடுத்த கருப்பணன் பெயரில் உள்ள கிரைய பத்திரமானது செல்லத்தகுந்த கிரைய பத்திரம் என்பதால் தான் அவர் அதை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித பாத்தியமும் இல்லாத போதிலும் நான் இந்த வழக்கில் சொத்துரிமையை விளம்புகை செய்யவேண்டிய பரிகாரம் கேட்காமல்

வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், ஆகையால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை உரிமையை விளம்புகை மற்றும் ஒப்படைவு செய்யவேண்டுமென்று பரிகாரம் கேட்டு வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றம், அவ்வாறு தாக்கல் செய்யப்படாமல் சொத்து பத்திரங்களை மட்டும் செல்லாது என்று அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் நான் உரிய நீதிமன்றம் கட்டணம் செலுத்தி உரிய பரிகாரம் கேட்காத காரணத்திற்காக வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரங்கள் 1970ம் ஆண்டு வாக்கில் ஏற்பட்ட பத்திரங்கள் என்பதால் காலம் கடந்து மேற்படி பத்திரங்களை செல்லாது என்று அறிவிக்க கோரியுள்ளபடியால் இந்த வழக்கு காலவதி தோஷத்தினால் பாதிக்கப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. எவ்வித பரிகாரம் இந்த வழக்கில் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :

மேற்படி 16.09.1970 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் பரமாயி பூர்விக பாத்தியம் என்று வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தை குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆம். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் உயிலை பற்றி ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீரணன் என்பவரை எவ்வாறு நியமித்துள்ளார்கள் என்றால் காப்பாளர் மற்றும் நிர்வாகியாக நியமித்துள்ளார்கள். 1988க்கு முன்பாக வழக்கு சொத்தை பொறுத்து பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டிருந்தது. 1976ல் என் தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது. வீரணன் 1980ல் காலமாகிவிட்டார்.

நீதிமன்ற கேள்வி :

என் தந்தை எப்போது அவரது பெயரில் பட்டா மாறுவதற்கு மனுசெய்தார் என்றால் 1976ம் ஆண்டு.

குறுக்கு விசாரணை :

என்னுடைய வழக்குரையில் 1976ல் என் தந்தை பட்டா மாற்றம் செய்வதற்கு மனு செய்துள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோமா என்றால் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. 1976ல் என் தந்தை பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.217 ஆகும். மேற்படி பட்டா எண்.217ல் சொத்தை அனுபவிப்பதற்கு ஆதரவாக அடங்கலோ, அல்லது வருவாய்துறை ஆவணங்களோ, அல்லது கிஸ்து ரசீதுகளோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1988ம் ஆண்டு என் தந்தைக்கு பட்டா எண்.1098 ஏற்கனவே வழங்கப்பட்டு, அதை எதிர்த்து கருப்பணன் மனு தாக்கல் செய்து, அதை 1989ல் வட்டாட்சியர் அவர்கள் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது வழக்கு சொத்திற்கு உண்டான பட்டாவாகும். அவ்வாறு பட்டா எண்.217 செல்லத்தக்க பட்டா அல்ல என்றும், அவ்வாறு வட்டாட்சியர் அதை வழங்கியிருந்தால் பட்டா எண்.1098 பட்டாவை வழக்கு சொத்திற்கு வழங்கியிருக்கமாட்டார்கள் என்றும், ஆகவே அது வழக்கு சொத்துக்கு உண்டான பட்டா அல்ல என்றால் சரியல்ல. வீரணன் என்பவர் வழக்கு சொத்தின் காப்பாளராகவும், செயல்படுத்தும் நிர்வாகியாகவும் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை.

மறுவிசாரணை :

வழக்கில் முதலாவது இலக்க சொத்தில் சர்வே எண்.558/2ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 71 செண்டு ஆகும் வழக்குக்குட்பட்ட சொத்தானது 3 ஏக்கர் ஆகும்.

குறுக்கு விசாரணை: இல்லை

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.17 18:55:28 +0530

Sub Judge

Melur